பக்கங்கள் 12
விலை ரூ. 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 38
கதிர் : 117
வியாழக்கிழமை 23 மார்ச் 2023
பங்குனி 09 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



“வாங்கினது கடன் எண்டாலும் உவையளின்ர வாய்ப்பந்தலுக்கு மட்டும் எந்தக் குறையுமில்லை பாருங்கோ”

# மறுசீரமைப்புக்கள் கசக்கும்; ஆனாலும் தவிர்க்க முடியாது!

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு**

**எதிர்கால நடவடிக்கை தொடர்பில் சபையில் விளக்கம்**

**ஒன்றிணைந்து செயற்படுமாறு கட்சிகளுக்கும் அழைப்பு**

கொழும்பு, மார்ச் 23

இது எமது பயணத்தின் முடிவு அல்ல. மற்றொரு நீண்ட பயணத்தின் ஆரம்பம். இன்னும் பல பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இங்குதான் நமது வெற்றிக்கான அடிப்படை இருக்கிறது. சில மறுசீரமைப்புக்களை, 2022 இடைக்கால வரவு – செலவுத்திட்டம் மற்றும் 2023 வரவு–செலவுத்திட்டங்களில் முன்மொழிந்து செயற்படுத்தி வருகிறோம். நாங்கள் இன்னும் பல மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துவோம். 2025 ஆம் ஆண்டுக்குள் முதன்மைப் பற்றாக்குறையை மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.3 வீதமாக மாற்றுவதே எமது இலக்காகும்.

»11

## 11 வயது சிறுவன் சடலமாக மீட்பு!

யாழ்., மார்ச் 23

காரைநகர், இலகடி பகுதியில் 11 வயதுச் சிறுவன் ஒருவரின் உடல் பொதுக் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த பரமநாதன் தக்சயன் (வயது-11) என்ற சிறுவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுவன் சென்ற சைக்கிள் கிணற்றுக்கு அண்மையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. குளிக்கச் »10

## புதிய அமைச்சரவை விரைவில் நியமனம்!

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியக் கடன் தொகையின் முதல் தவணைக் கொடுப்பனவு கிடைத்துள்ள நிலையில், புதிய அமைச்சரவையை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என்று தெரியவருகின்றது. »10



## கடந்தகாலத்தை மறந்துவிடுவோம்; எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவோம்!

**ரணில் விக்கிரமசிங்க தத்துவம்**

கொழும்பு, மார்ச் 23

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றாமல், ராஜபக்சவினரைக் காப்பாற்றுவதே தனது நோக்கம் என்று பலர் குற்றஞ்சாட்டினாலும், இலங்கை கடினமான தொங்கு பாலத்தைக் கடப்பதற்காக நான் பணியாற்றியதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. »10

நாகர்கோவிலில்

## கரையிலிருந்த 10 படகுகள் அதிகாலையில் தீக்கிரை!

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவிலில் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த 10 படகுகள் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 »10

## விவாதம் வேண்டும் சாதிக்கிறார் சஜித்!

கொழும்பு, மார்ச் 23

முறையான நாடாளுமன்ற விவாதம் மற்றும் ஆய்வு இன்றி சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை »11

## எழிலன் தொடர்பான வழக்கு மே மாதத்துக்கு ஒத்திவைப்பு

வவுனியா, மார்ச் 23

இராணுவத்தினரால் காணாமல் ஆக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் உட்பட ஏனையோர் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை »11

## ஹெரோய்ன் சந்தேகநபருக்கு பிணை

யாழ்., மார்ச் 23

ஹெரோய்ன் போதைப்பொருளைப் பயன்படுத்திய குற்றச்சாட் »11

வடமராட்சியில்

## மின்சாரத்தில் தாக்குண்டு இளைஞன் பரிதாபமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வல்வெட்டித்துறை, வன்னிச்சியம்மன் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் மின்சாரம் தாக்கியதில் 26 வயது »10

## ஒன்பது அரசியல்கைதிகள் நேற்றுமுன்தினம் விடுதலை

முல்லைத்தீவு, மார்ச் 23

முல்லைத்தீவு,ஒட்டுசுட்டான் பகுதியில் வைத்து 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட »11

## நகைத் திருட்டு சந்தேகநபர் மருத்துவமனையில் ஓட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு, மருத்துவப் பரிசோதனைக்காக அழைத்து »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வளவு டொலர் வந்தாலும் இலங்கையின் பாதை கடினம்

## மூடிஸ் நிறுவனம் வெளிப்படை

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பு இலங்கைக்கு வெளித்தோற்றமல்ல. பலதரப்பு மற்றும் உலகளாவிய நிதி நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு நிதியைப் பெற்றாலும், இலங்கைக்கு கடினமான பாதையுள்ளது என்று மூடிஸ் பகுப்பாய்வு நிறுவனத்தின் மூத்த பொருளாதார நிபுணர் கத்ரீனா எல் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு கிட்டத்தட்ட 3 பில்லியன் டொலர் பிணையெடுப்புக்கு ஒப்புதல் அளித்தது. இதர தரப்புக்களிடமிருந்து வரவுள்ள டொலர் உள்ளடங்கலாக இலங்கைக்கு சுமார் 7 பில்லியன் டொலர் இவ்வாறு கிடைக்கவுள்ளது.

இந்த நிலையிலேயே, நிதிகள் கிடைத்தாலும் இலங்கை கடினமான பாதையிலேயே தொடர்ந்தும் பயணிக்கும் என்று மூடிஸ் நிறுவனத்தின் மூத்த பொருளாதார நிபுணர் தெரிவித்துள்ளார்.

> இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புக்களில் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை காணாதவரையில் நிதிச் சந்தைகளில் வெளிப்படும் உற்சாகம் உண்மையில் மங்கிவிடும்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புக்களில் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காணாத வரையில் நிதிச் சந்தைகளில் வெளிப்படும் உற்சாகம் உண்மையில் மங்கிவிடும். வரவிருக்கும் மாதங்களில் நாடு பெறும் அனைத்துக் கூடுதல் நிதிகளும் நல்ல செய்தியாக இருக்கும். எனினும் நிதியை ஈட்டுவதில் உள்ள விவேகம் மற்றும் கடன் நிலைத்தன்மை ஆகியவை சிறந்த முறையில் பேணப்படவேண்டும் - என்றார். (ம)



## மோ.சைக்கிளை வழிமறித்து தீ வைத்த வன்முறைக்கும்பல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்த வன்முறைக்கும்பலொன்று, அதனை தீயிட்டு எரித்துள்ளது என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு முன்னால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இருபாலை வீதியில் முட்டையைக் கொள்வனவு செய்வதற்காக 18 மற்றும் 16 வயதான இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். அவ்வேளை அந்த வழியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வரடங்கிய வன்முறைக்கும்பல், முட்டை வாங்கச் சென்ற இளையோரின் மோட்டார் சைக்கிளை உதைத்து விழுத்தியுள்ளது.

முட்டை வாங்க மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் வன்முறைக்கும்பலிடமிருந்து தப்பிச் சென்றுள்ளனர். அதன்பின்னர் அந்த மோட்டார் சைக்கிளை தீயிட்டு எரித்துவிட்டு வன்முறைக்கும்பல் தப்பிச்சென்றது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டைமைய மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஓ-14-125)

### சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட

## முல்லை மீனவர்கள் யாழில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 23

சட்டவிரோதமான மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் முல்லைத்தீவு மீனவர்கள் 5 பேர் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர். கடற்படையினரால் சுண்டிக்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே மீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களிடமிருந்து 3 டிங்கி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. (ஓ-14-213)

## மருத்துவமனையில் அலைபேசி திருட்டு!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.போதனா மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்தவரின் கைபேசியை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அண்மையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

மருத்துவமனையில் துப்புரவு பணியில் ஈடுபடும் 24 வயதுடையவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து திருட்டுப் போன கைபேசி மீட்கப்பட்டுள்ளது எனவும் சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-26)



### ஏப்ரல் 30 முதல் மே 02 வரை

## 'குருதி கழுவிய குவலயம்' திருப்பாடுகளின் நாடகம்

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற திருப்பாடுகளின் நாடகம் இந்த ஆண்டு "குருதி கழுவிய குவலயம்" என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான நான்கு நாள்களும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மாலை 6.45 மணிக்கு மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய பார்வைகளுடன் ஆற்றுகையை மேடையேற்றி வந்துள்ளது.

இந்தமுறை மேடையேற்றப்படும் "குருதி கழுவிய குவலயம்" முதன்முதலாக 1999ஆம் ஆண்டிலும், அதன் பின்னர் 2005ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது 18 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் மேடையேற்றப்படவுள்ளது.

"குருதி கழுவிய குவலயம்" நாடகப் பிரதியை திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதியுள்ளதுடன் அவரே இம்முறை நெறியாள்கை செய்யவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-14)

## இலங்கையின் கடன்சுமையை குறைப்பதற்கு சீனா பாடுபடும்

கொழும்பு, மார்ச் 23

நியாயமான சுமைபகிர்வு கொள்கையின்கீழ் இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் சீனா முழுமையான அர்ப்பணிப்புடன் பங்கேற்கும் என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை வழங்கவுள்ள நிலையில், அது தொடர்பில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் மேலும் தெரிவித்ததாவது:-

சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி, வங்கிக் கடன் பிரச்சினைகளை விரைவாகவும் திறம்படமாகவும் நிவர்த்தி செய்வதற்கு இலங்கைக்கு நிதியுதவி ஆதரவு ஆவணங்களை வழங்கியுள்ளது.

தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராகவுள்ளது. இலங்கையின் நிலைமையை வழிநடத்துவதற்கும், அதன் கடன் சுமையைத் தளர்த்துவதற்கும், நிலையான அபிவிருத்தியை அடைய உதவுவதற்கும் தொடர்ந்து சாதகமான பங்கை வகிக்க சீனா தயாராகவுள்ளது - என்றார். (ம)

# ஆசிரியர் இடமாற்றங்கள் நிறுத்தப்படவில்லை!

ஆசிரியர்களின் இடமாற்றங்கள் எவையும் நிறுத்தப்படவில்லை. நேற்றுமுன்தினம் மற்றும் நேற்று ஒரு தொகை ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வினவிய கூற்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

10 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதை அடிப்படையாகவைத்தே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டிலிருந்தே இந்த இடமாற்றங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அந்த ஆசிரியர்கள் மட்டும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க இடமாற்றம் பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த 3 வருடங்களில் கொரோனா சூழ்நிலை காரணமாக இந்த நடவடிக்கை இடம்பெறவில்லை. அதற்கமைய அனைத்தையும் ஒன்றிக இணைத்து தற்போது எடுத்துள்ளோம். மொத்தமாக 8ஆயிரத்து 893 இடமாற்றங்களுக்கான அனுமதி இடமாற்ற சபை மூலம் கிடைத்துள்ளது. இதில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் 681 பேர் அடங்குகின்றனர். அந்த வகையில் 388 இடமாற்றக் கடிதங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. மீதமானவை உடனடியாகவே தபாலில் அனுப்பப்படும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவில் ஊடகர்களுக்கு கடற்படையினர் அச்சுறுத்தல்

**யாழ்ப்பாணம், மார்ச் 23**

**நெடுந்தீவு இறங்கு துறைமுகத்தில் செய்தி சேகரிப்புக்காகச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு கடற்படையினர், காணொலி, ஒளிப்படம் என்பவற்றை எடுக்கக்கூடாது என்றும் அச்சுறுத்தியுள்ளனர். அத்துடன் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலும் அங்கு தாராளமாகவே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நெடுந்தீவுப் பகுதிக்கு செய்தி அறிக்கையிடலுக்காக ஊடகவியலாளர் குழுவொன்று நேற்றுமுன்தினம் சென்றுள்ளது. அந்த ஊடகவியலாளர் குழு நெடுந்தீவு இறங்கு துறைமுகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகையொன்றை ஒளிப்படம் எடுக்க முயன்றபோது அவ்வாறு ஒளிப்படமோ அல்லது காணொலியோ எடுக்கக்கூடாது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவு பிரதேசமானது, கலாசார மற்றும் தொல்லியல்சார் மரபுரிமைகளைக் கொண்டு காணப்படுகின்ற நிலையில், தென்னிலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து பல சுற்றுலாவிகள் நெடுந்தீவுக்குச் சுற்றுலாவை மேற்கொள்ளுகின்றனர். இந்த நிலையில், நெடுந்தீவில் உரிய வரலாற்றுத்துறை நிபுணர்களின் வழிகாட்டலின்றியும் உரிய திணைக்கள அனுமதிகளின்றியும் சட்டவிரோதமாக பதாகைகளைக் காட்சிப்படுத்திவிட்டு அவற்றை ஒளிப்படம் எடுக்கக்கூடாது என்று தெரிவிப்பது மனித உரிமை மீறலும் அச்சுறுத்தலுமாகும் என்று ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-125)



## நெடுந்தீவு சேவையில் ஈடுபடுகின்ற ஒரேயொரு பேருந்தும் செயலிழப்பு

### *அரச அலுவலர்கள், மக்கள் அவதி நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 23

கோண்டாவில் இ.போ.ச. சாலைக்குச் சொந்தமான நெடுந்தீவு போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற ஒரேயொரு இ.போ.ச. பேருந்தும் இரண்டு தடவைகள் சேவையில் ஈடுபடும் நிலையில் அதுவும் செயலிழந்து போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என பொதுமக்கள் மற்றும் அரச அலுவலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவு போக்குவரத்துச் சேவையில் ஒரேயொரு இ.போ.ச. பேருந்து மாத்திரமே காலையும் மாலையும் இரண்டு தடவைகள் சேவையில் ஈடுபட்டது.

அந்தப் பேருந்து அண்மையில் விபத்துக்குள்ளான நிலையில் சேதம் அடைந்ததால் செயலிழந்துள்ளது. இங்குள்ள வீதிகள் மோசமாக நிலையில் காணப்படுகின்றமையும் பேருந்து செயலிழப்புக்கு காரணமாக அமைகிறது.

பேருந்து தடைப்பட்டதால் நெடுந்தீவுக்கு வருகை தரும் அரச பணியாளர்கள், சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என அனைவரும் பாதிப்புற்றுள்ளனர்.

எனவே தீவக மக்களின் கோரிக்கையை செவிமடுத்து உடனடியாக பேருந்துச் சேவை உடனடியாக ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

இதுதொடர்பில் கோண்டாவில் இ.போ.ச. சாலை செயற்பாட்டு முகாமையாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது;

யாழ்.மாவட்டச் செயலருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி கடற்படைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றை மாற்று சேவையில் ஈடுபடுத்துவதற்குக் கோரப்பட்டுள்ளது. கடற்படையினரின் அனுமதி கிடைத்தவுடன் மாற்று பேருந்துச் சேவை இடம்பெறும் - என்றார். (ச-125)

## வீதியில் நகை கொள்ளை சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வீதியால் சென்ற பெண்ணின் நகையைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொள்ளையடிக்கப்பட்டது.

இது தொடர்பில் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணைக் குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் சந்தேகத்தின் அடிப்படையில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சங்கானை மற்றும் வட்டுக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 7 நாள்கள் விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டது என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14, 23)

### *முகமாலையில்*

## கண்ணிவெடி அகற்றிய காணிகளில் விவசாயம்

கிளிநொச்சி, மார்ச் 23

போரின்போது முன்னரங்க பகுதியாக விளங்கிய முகமாலைப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பான இடமாக மாற்றியமைத்து மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், அந்தக் காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். ஜப்பான் நிதியுதவியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

'டாஸ்' மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அமைப்பு முகமாலை மற்றும் மணலாறுப் பகுதிகளில் இதுவரை 357 இடங்களில் கண்ணடிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 13 இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. கண்ணிவெடி மற்றும் அபாயகரமான வெடிக்காத வெடிபொருள்கள் அக்கற்றப்பட்ட பிரதேசங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கண்ணிவெடி அகற்றப்பட்டு பாதுகாப்பான நிலமாக மக்களிடம் கையளிக்கப்பட்ட பகுதிகளில் மரமுந்திரிகை தோட்டங்கள், தென்னைச்செய்கை உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளை பொதுமக்கள் ஆரம்பித்துள்ளனர். (ச-214)

### முல்லைத்தீவில்

## நீர்கொழும்புவாசிக்கு 46 ஏக்கரில் உப்பு உற்பத்தித் திட்டத்துக்கு காணி!

### *அந்தப் பகுதி மக்கள் ஆதங்கம்*

முல்லைத்தீவு, மார்ச் 23

முல்லைத்தீவு மாவட்ட கொக்குகிளாய் கடல் நீரேரியை அண்மித்த பகுதியில் நீர்கொழும்பிலுள்ள தனிநபர் ஒருவர் உப்பு உற்பத்தி செய்வதற்கு எந்தவித அறிவிப்புமின்றி அனுமதியளிக்கப்பட்டு காணிஅளவீட்டு பணிகளை மகாவலி அபிவிருத்தித் திட்டம் முன்னெடுத்துள்ளது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழரின் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் பணிகள் எந்தவித முன்னறிவிப்புகளுமின்றி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீர்கொழும்பிலுள்ள ஒருவர் மகாவலி எல் வலயத்தில் கிரிஇப்பன்வெவ ஜனகபுர பகுதியில் கொக்கிளாய் கடலுக்கருகில் 46 ஏக்கரில் உப்பு உற்பத்தி செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

அண்மையில் வெலிஓயா பிரதேசத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் குறித்த உப்பு உற்பத்திக்காகப் பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் தொல்பொருள் எச்சங்கள் காணப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துமாறு மகாவலி அதிகாரசபை தொல்லியல் திணைக்களத்திடம் கோரியுள்ளது.

அதற்கமைய தொல்லியல் திணைக்களத்தினர் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாகத்துக்கு உட்பட்ட தமிழ் மக்களின் பூர்வீகப் பகுதிகளை எல்லைப் படுத்தி தொல்லியல் தொடர்பான கள ஆய்வை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் தமக்குச் சொந்தமான வயல் நிலங்களில் தமிழ் மக்கள் காலாகாலமாக விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் திரைமறைவில் இந்த சுவீகரிப்பு இடம்பெறுகிறது.

எனவே எந்தவித முன்னறிவிப்புமின்றி மகாவலி அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கும் இந்தச் சட்டவிரோத செயலுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்கவேண்டும், தடுத்து நிறுத்தவேண்டும்- என்றனர். (ச-19)

### முல்லைத்தீவில்

## 25 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக செய்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையை 25 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ள இலக்கிடப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட கமநலஅபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர்.பரணீகரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பாலான குளங்களில் நீர்வரத்து அதிகமாகக் காணப்படுவதால் இந்த ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையை 25 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தால் விவசாயிகளுக்காக வழங்கப்பட்ட ரி.எஸ்.பி. மானிய உரம் வழங்கும் பணிகள் மாவட்டத்திலுள்ள அனைத்து கமநலசேவைகள் திணைக்களமூடாகவும் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. விவசாயிகளுக்குத் தேவையான 86 சதவீத உரம் கிடைத்துள்ளது.

விவசாயிகளுக்கான யூரியா உரம் இன்னமும் கிடைக்கவில்லை. ஆயினும் யூரியா உரத்தை முன்னுரிமை அடிப்படையில் ஏக்கருக்கு 49 கிலோ என்ற அடிப்படையில் 200 ரூபா படி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வன தினத்தை முன்னிட்டு சரணாலயத்தில் கழிவகற்றல்

யாழ்ப்பாணம், மார்ச் 23

உலக வன நாளை முன்னிட்டு தென்மராட்சி சரசாலை குருவிக்காடு பறவைகள் சரணாலயப் பகுதியில் திண்மக் கழிவுகள் அகற்றும் செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. வன பரிபாலன திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேசசபை மற்றும் பொதுமக்கள் இணைந்து கழிவகற்றும் செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர்.

(ஓ-14-20)

CHEC

வெளிநாட்டு வாழ்க்கைக்கு அடித்தளமிடும் உயர்கல்வி

இலவச கருத்தரங்கு

உங்கள் வெற்றிப் பயணத்தை தீர்மானிப்பதற்கான அரிய வாய்ப்பு

டில்கோ யாழ் சிட்டி ஹோட்டல், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
காலை 10.00 முதல் 02.00 மணி வரை | 25ஆம் திகதி மார்ச் 2023

ஓவியா ஹோட்டல், வவுனியா.
காலை 10.00 முதல் 02.00 மணி வரை | 26ஆம் திகதி மார்ச் 2023

தொடர்புகளை ஏற்படுத்தி உங்கள் இருக்கைகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
முன்பதிவுகள் செய்யப்பட்ட மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

+94 774 311 140 / +94 77 716 7606

COLOMBO HIGHER EDUCATION CONSULTANCY (PVT) LTD
40- 2/2, Galle Road, Colombo - 06, Sri Lanka. | 0117 549 600
E-Mail : info@checonline.com | Web : www.checonline.com

## மரபுவழிக் கவிதையாக்கப் பயிற்சி

மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்க முப்பதாவது நிறைவு விழாவை முன்னிட்டு இலக்கிய போட்டிகள் நடத்தப்பட இருக்கிறது. அதற்குப் பக்கபலமாக மரபு வழிக் கவிதையாக்கப் பயிற்சி வரும் (25.03.2023) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு இடம்பெறுகிறது. 10 ஆம், 11 ஆம் (G.C.E. O/L), 12 ஆம், 13ஆம் (G.C.E. A/L) வகுப்பு மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் நாட்டமுள்ள இளையோரும் பங்குபற்றலாம். முன்கூட்டியே தங்கள் பெயர், விவரத்தை மாதகல் அபிவிருத்தி சங்க அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதன் மூலம் இடநெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**பயிற்சி ஒருங்கிணைப்பு:**
**மாதகல்வாசி காசி.ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்)**

## பொது அறிவித்தல்
## மாநகரசபை யாழ்ப்பாணம்
## பாதீடு -2023

யாழ். மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைவு 2023.03.23 தொடக்கம் 2023.03.29 ஆம் திகதி வரை.

- யாழ். மாவட்டச் செயலகம்
- யாழ். பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ். மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி
- யாழ் பொது நூல்நிலையம்
- நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ் வரைவுப் பாதீட்டு வரைவினை பரிசீலித்து இதனை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்குத் தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகள் என்பவற்றை எதிர்வரும் 2023.03.29 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகரசபைச் செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2023.03.23

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கிளிநொச்சி வளாகம், அறிவியல் நகர்

கீழ்க்காணும் உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பிரதிப் பதிவாளர் பணிமனையில் 10.04.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பொறியியற் பீட உணவகம் | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |
| விவசாய பீட உணவகம் | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |
| தொழில்நுட்ப பீட உணவகம் | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |
| விவசாய பீட புதிய உணவகம் (Juice Canteen) | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |
| ஆண்கள் விடுதி உணவகம் | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 9700 0006 0000 268 இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/= இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 9700 0006 0000 276 இற்கும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து **கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.** கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல. [illegible]0180) பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
22.03.2023

(CR 395111)-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பின்லாந்தும் இலங்கையும்!

உலகின் மகிழ்ச்சியான நாடாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது பின்லாந்து. கடந்த இருபது வருடங்களாகவே பின்லாந்தைத் தவிர்த்துவிட்டு 'உலகின் மகிழ்ச்சியான நாடுகள்' தொடர்பில் கதைத்துவிடமுடியாது. அந்தளவுக்கு தன்னை உலகின் மகிழ்ச்சியான நாடாக நிலைநிறுத்துவதற்கான அத்தனை முன்னேற்பாடுகளையும் முழுவீச்சில் செயற்படுத்தியிருக்கின்றது பின்லாந்து. அதிலும், கடந்த நான்கு வருடங்களாக இந்தப் பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கின்றமை பின்லாந்தின் ஆகப்பெரும் சாதனையென்றே கொள்ளவேண்டும். பின்லாந்துக்கு அடுத்த இடத்தில், அதாவது 'உலகின் இரண்டாவது மகிழ்ச்சியான நாடாக' மாறியிருக்கிறது டென்மார்க். இவை, எத்தகைய செயற்றிட்டங்கள் மூலம் உலகின் மகிழ்ச்சியான நாடாக தம்மை மாற்றியிருக்கின்றன? என்ற தேடல் இங்கு தவிர்க்க முடியாததாகின்றது.

மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் மட்டுமல்ல, கடவுள் நம்பிக்கையற்றவர்கள் (நாத்திகர்கள்) அதிகமாக வாழ்கின்ற நாடுகளின் பட்டியலிலும் பின்லாந்து, டென்மார்க் நாடுகளுக்குத் தனியிடம்தான். இந்த நாடுகளில் 40 சதவீதமானோர் கடவுள் நம்பிக்கையற்றவர்கள். அங்கே மதம் என்பது வலிந்து திணிக்கப்படும் விடயமல்ல. அது ஒவ்வொரு மனிதனுடைய தனிநபர் சுதந்திரத்துக்கும், சிந்தனை மட்டத்துக்கும் ஏற்ப (முற்றுமுழுதாக) விடப்பட்டிருக்கின்றது. இந்த நிலையை 'ஆகச்சிறந்த மதச் சகிப்புத்தன்மை கொண்ட கட்டமைப்பு' என்று அடையாளப்படுத்துகின்றனர் மனித உரிமைகள் ஆர்வலர்கள். இந்த மத சகிப்புத்தன்மைக் கட்டமைப்புத்தான் பின்லாந்து, டென்மார்க் நாட்டவர்கள் தேவையற்ற துவேசங்கள், விரோதங்கள் இல்லாமல் அமைதியான – மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு பெரும் பங்காற்றுகின்றது. இனங்களுக்கு இடையிலான நல்லுறவும் அந்த நாடுகளில், அந்தந்த அரசாங்கங்களால் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு அதி உச்சமானதும் நேரடிக் கண்காணிப்பின் கீழானதுமான விடயங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்துதான் உலகின் ஆகச்சிறந்த நாடுகளாக பின்லாந்து, டென்மார்க் அலங்கரிக்கப்படக் காரணமாகியிருக்கின்றன.

இனவாதமும் மதவாதமும் இன்று 'உலகின் சபிக்கப்பட்ட மொழிகளாக' மாறியிருக்கின்றன. இந்த இரண்டு சித்தாந்தங்களும்தான் உலகில் நடந்த – நடந்துகொண்டிருக்கின்ற போர்களுக்கும், உள்நாட்டுக் கலவரங்களுக்கும், ஆக்கிரமிப்புக்களுக்கும், தாக்குதல்களுக்கும் முதன்மைக் காரணம். சிரியா, ஈராக், பலஸ்தீனம், பாகிஸ்தான், மியான்மர் என இதற்கான உதாரணப் பட்டியல் மிகமிக நீட்சியானது. இலங்கையில் கடந்த 70 ஆண்டுகளாக நிலவும் பதற்றமான சூழ்நிலைக்குக் காரணமும் இதே இனவாதமும் மதவாதமும்தான். 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தின் பின்னரும் இலங்கை ஒரு இந்த விடயங்களைக் கடந்தபாடில்லை. இன்றும்கூட இனவாதத்தையும் மதவாதத்தையும் முன்னிறுத்திய நடவடிக்கைகள்தான் இலங்கையின் அரசியலிலும் அபிவிருத்தியிலும் எஞ்சிநிற்கின்றன. இதனால்தான் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் 112 ஆவது இடத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது இலங்கை.


இனவாதமும் மதவாதமும் இல்லாமலாக்கப்பட்டால் இந்த நாட்டின் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வார்களா? பொருளாதாரம் என்பது அவசியம் இல்லையா? என்ற கேள்வி பலருக்கும் எழலாம். பொருளாதாரமும் அபிவிருத்தியும் மகிழ்ச்சியான வாழ்வுக்கு அவசியம்தான். அதை மறுத்துரைப்பதற்கில்லை. ஆனால், எல்லாவற்றையும்விட மிகமிக முக்கியம் இனவாதமும் மதவாதமும் நீக்கப்பட்ட சமூகத்தின் உருவாக்கம். பலமான கட்டடத்துக்கு இறுக்கமான அத்திபாரம் எவ்வளவு முக்கியமோ அவ்வாறான நிலையிது. இவ்வாறான எத்தனையோ கற்பிதங்கள் சூழ்ந்திருந்தாலும், இவற்றிலிருந்து எத்தகைய படிப்பினையை அரசாங்கம் பெற்றுக்கொள்ளப்போகின்றது? என்ற வினா எழாமலில்லை. ஆனால், இதுவிடயத்தில் அரசாங்கத்தை மட்டும் குறைகூறிப் பயனில்லை. ஏனெனில், மதங்களை முன்னிறுத்திய ஆரோக்கியமற்றதும் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடியதுமான கருத்தாடல்கள் வடக்கு – கிழக்கில் சிறுபான்மைச் சமூகங்களிடையேகூட அண்மைக்காலமாகத் தீவிரம் பெற்றிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இனப்பெருமையும், மதநம்பிக்கைகளும் கத்திமுனை நடை போன்று கவனமாகக் கையாளப்பட வேண்டியவை. ஓர் இனத்தின், மதத்தின் பெருமைகளை, பண்பாடுகளை, இதர அம்சங்களை ஒன்றை வைத்து மற்றொன்றை நீர்த்துப்போகச் செய்யாமலும் உள்ளதை உள்ளபடியாக அணுகுவதுமே ஆரோக்கியமான, மகிழ்ச்சியான சமூகத்தை – நகரத்தை – நாட்டை உருவாக்கும். அதைவிடுத்து கடனாக காசு வந்ததற்கெல்லாம் வெடிகொளுத்தி விளையாடுவதால் மட்டும் இலங்கை ஒருபோதும் மகிழ்ச்சியான நாடாக மாறாப்போவதில்லை. இதனை ரணில் அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுக்கும் [illegible] ஆதரவாளர்கள் கொஞ்சமேனும் புரிந்துகொள்ளட்டும்.

நாளொரு நல்வார்த்தை

"தனக்கு கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பைவிட தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக்காட்டும் மனிதன் தான் சமூகத்தில் முன்னேறமுடியும்"

– ஆபிரகாம் லிங்கன்




# இந்திய ரூபாவில் வர்த்தகம்: மொறகொட – சீதாராமன் பேச்சு!

**கொழும்பு, மார்ச் 23**

**இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகத்தை, இந்திய ரூபாவின் முன்னெடுப்பது தொடர்பாகவும் அதை விரிவாக்குவது தொடர்பாகவும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோர் இருதரப்புப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.**

இலங்கையின் பொருளாதாரப் பேரிடரில் இந்தியாவின் உதவிகள் தொடர்பில் 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் சீதாராமன் - மொறகொட இருவரும் இருதரப்புப் பேச்சுக்களை நடத்திவருகின்றனர். இந்த பலசுற்றுப் பேச்சுக்களின் ஓரம்சமாகத்தான் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பும் அமைந்துள்ளது.

இந்திய முதலீடுகளை இலங்கைக்கு ஈர்ப்பது, இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவது, இலங்கைக்கு இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பது தொடர்பிலும் அவர்கள் இருவரும் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். (ம)

# எரிபொருள், மின்கட்டணம்: விலைகள் குறைக்கப்படும்

## *எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 23

எரிபொருள் மற்றும் மின்கட்டணம் என்பவற்றின் விலைகள் விரைவில் குறைக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சா எண்ணெய் விலை குறைந்து வருகிறது. மேலும் ரூபாவின் மதிப்பும் வலுவடைந்து வருகிறது. எரிபொருள் விலையில் நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி எனக்கு ஏற்கனவே பணிப்புரை விடுத்துள்ளார். நாங்கள் அந்தச் சலுகைகளை வழங்குகிறோம். சாலைகளில் போராட்டம் நடத்தி மின்சாரத்தை துண்டிக்கும்போது முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வரமாட்டார்கள். சில அரசியல் கட்சிகள் அதைச் செய்கின்றன. அரசியல் கட்சிகள் வழிநடத்தும் தொழிற்சங்கங்கள் உள்ளன. சிலர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் போட்டியிடுகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்திலிருந்து பணம் வரும்போது, அவர்களின் முழக்கங்களில் ஒன்று தொலைந்துபோகிறது. எரிபொருள் விலை குறையும்போது மற்றொரு போராட்டம் இல்லாமற் போகின்றது. பொருள்களின் விலை குறையும்போது மற்றொரு எதிர்ப்பு முழக்கம் மறைந்துவிடும் - என்றார். (ம-இ)

நாளை

24.03.2023
வெள்ளிக்கிழமை
பங்குனி 10

சுபநேரம் : 06.16 - 07.46
ராகுகாலம் : 10.46 - 12.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## குலராஜன் Terrance இராசநாயகம்

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto வை வதிவிட மாகவும் கொண்ட குலராஜன் Terrance இராசநாயகம் அவர்கள் கடந்த (17.03.2023) வெள்ளிக்கிழமை Toronto வில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற Edwin இராசநாயகம் Dalsey செல்வரதி தம்பதிகளின் அருமை மகனும். சாந்தி Pricella அவர்களின் அன்புக்கணவரும். Edwin, Melvin Rebeacca இவர்களின் பாசமிகு தந்தையும். சுபித்தா. லலித்தா. வனித்தா. காலஞ் சென்ற அமித்தா மற்றும் அஜித்தா. நிர்மலா. சியாமளா. நிலாந்தி ஆகியோரின் அருமைச் சகோதரனும். Marthaவின் அன்பு மாமனாரும். Isabella, Faith, Joseph ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.03.2023) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையும் பின்னர் (25.03.2023) சனிக்கிழமை 9.30 முதல் 10.00 மணி வரையும் 3280 Shepard Ave E உள்ள Highlanad Funaral home இல் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் இறுதி ஆராதனை 10.00 மணி முதல் 11.30 மணி வரை நடைபெற்று பின்னர் காலை 11.30 மணியளவில் Christ the king Cemetery இல் (7770 Steeles AveE Markham on I6B LAB) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புக்கு
மனைவி : 416 609 3845

தகவல்:
**சண்முலிங்கம் சரஸ்**
இல.25, செல்வஸ்தான்
கல்லடி லேன், சாவகச்சேரி.

(CR 39503)(3/6)

# மரண அறிவித்தல்



## ஏகாம்பரநாதன் பரஞ்சோதி

யாழ். மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரநாதன் பரஞ்சோதி கடந்த (17.03.2023) வெள்ளிக்கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த ஏகாம்பரநாதன் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான உமையம்மை பராசக்தி. யோகாம்பிகை. சுயம்சோதி ஞானாம்பிகை மற்றும் சாம்பசிவமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும். ஞானாம்பிகை (கௌரி) அவர்களின் அன்புக் கணவரும். ஆனந்தி. ரஞ்சனி (Babyteacher), தயாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும். சறோஜா. தங்கராணி ஆகியோரின் பாசமிகு வளர்ப்புத் தந்தையும். அருணாசலம். ஸ்ரீகதிர்காமநாதன். மைதிலி. ரவீந்திரன். கிருபானந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும். கார்த்திகா - கிருஷாந்த். காயத்திரி - ரஜீவன். பார்த்திபன் ஆகியோரின் அன்புப் பேரனும். நயனி அவர்களின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலுக்கு 17.03.2023 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் அவரது வீட்டில் உற்றார். உறவினர்கள். நண்பர்கள். அயலவர்களின் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அதன் பின்னர் அவரது பூதவுடல் அவரது விருப்பப்படி குடும்பத்தினரால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குக் கையளிக்கப்பட்டது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**ஆனந்தி - மகள்** Mobile : + 44 775 878 8277
**ரஞ்சனி - மகள்** Mobile : + 94 77 953 3054
**ரஞ்சனி - மகள்** Mobile : + 1 416 317 6374
**தயாநிதி - மகன்** Mobile : + 94 76 727 3143
**தயாநிதி - மகன்** Mobile : + 1 647 298 1894

தகவல்:
**குடும்பத்தினர்**

# பெயர் மாற்றம்

இல.74/1 ஓட்டுமடம் வீதி. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **சந்தியோகு தாசியஸ்** ஆகிய நான் இன்று தொடக்கம் எனது பெயரை **தாசீசியஸ் தேவராசா** என மாற்றம் செய்வதோடு இனி வரும் காலங்களில் அனைத்து ஆவணங் களிலும் **தாசீசியஸ் தேவராசா** எனப் பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS 24131)(3/6) **தாசீசியஸ் தேவராசா**

# ஆசிரியர்கள் தேவை

**யாழ்நகரில் இயங்கும் பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு**
**தரம் - 1 தொடக்கம் தரம் - 05**
**வரையான ஆரம்பப் பிரிவு வகுப்புக்களுக்கு**
கற்பிக்ககூடிய பாடசாலை
ஆசிரியர்கள் தேவை.

**077 459 8440**

# படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2023

இவ்வருடம் யாழ் மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள். மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற்கொண்டு. உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 23.03.2023 தொடக்கம் 06.04.2023ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல பட வரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர். NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ள பட்சத்தில் உரிய சான்றிதழுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம் அத்துடன்.
- NVQ-4 தேசிய சான்றிதழ் தர படவரைஞர் (கட்டடம்) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் "இவ்வருடத்திற்குள் (31.12.2023) NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் கடிதத்தினை கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்" எனும் நிபந்தனையுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- மேலும். ஏற்கனவே இவ்வருடம்(2023) பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்கள். NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்திருப்பின் உரிய சான்றிதழினை சமர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது NVQ-4 தேசிய சான்றிதழ் தர படவரைஞர் (கட்டடம்) சான்றிதழுடன் "இவ்வருடத்திற்குள் (31.12.2023) NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் கடிதத்தினை கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்" எனும் நிபந்தனையுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் பட்சத்தில் எமது மாநகர சபையில் 2023 ஆம் ஆண்டிற்கான படவரைஞர்களாக செயற்பட முடியாது.

**மாநகர ஆணையாளர்,**
**யாழ் மாநகரசபை.**

(CR 39498)(3/6)

# நினைவழியாப் பெருந்துயரில்
# பதினெட்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மகிழ
02 – 06 – 1953



அன்னை தவிக்க
10 – 04 – 2005

## அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா

(நகரசபை , சாவகச்சேரி)

### திதி : பூர்வபக்க துதியை [23.03.2023]

ஆண்டு பதினெட்டு கடந்தாலும்
உங்கள் அன்பொழுகும் தங்கமுகம்
மறந்தோமில்லை
இன்றும் உங்கள் பிரிவால் எம் இதயம்
கலங்குகின்றது.!
இன்று போல் இருக்கின்றதே ஆனால்
ஈரொன்பது வருடம் ஆகிவிட்டதே!
இப்பிரிவு எம் வாழ்க்கையில் நீங்கா வடு
அன்பான மகனாய் ஆசையான
பெரிய அண்ணாவாக
பாசமான கணவராய். கொஞ்சிப்
பேசும் அப்பாவாக
மழலை மொழி பொழியும் அப்பாவாக
அம்மப்பாவாக
ஊரேமெய்க்கும் அளவுக்கு தலைசிறந்த
மனிதனாக வாழும்போது
யாரிடமும் சொல்லாமல் எங்கு
சென்றுவிட்டீர்கள் ....
நாங்கள் இவ்வுலகில் ஊமையாய்
உலாவுகிறோம்
எங்கள் அழுகுரல் கேட்கிறதா
எப்போது நாங்கள் உங்களுடன்
வந்து சேர்வது
என்று ஒவ்வொரு வினாடியும் ஏங்குறோம்

ஒரு முறையாவது உங்கள் முகம்
பார்க்க தவிக்கிறோம்
உங்கள் குரல் கேட்க துடிக்கிறோம்
ஒரு நிமிடம் கூட உங்களை நினைக்காத
நாளே இல்லாமல்.....
இறைவா! அப்பாவை இழந்த
பிள்ளைகளின் சார்பில்
உனக்கோர் விண்ணப்பம்
இறுதிவரை தன் குடும்பத்திற்காக
உழைக்கும் அப்பாக்களுக்கு
ஆயுளை அதிகமாய் கொடு,
ஏனெனில் தன் நெஞ்சில் சுமக்கும்
பிள்ளைகளின்
பெருவாழ்வை பார்த்து
பெருமூச்சு விடுவதற்குள் ஏன் அவர்களை
உன்னுடன் அழைத்துக் கொள்கிறாயே
எத்தனை கோடி ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் இடம் எங்கள் வாழ்க்கையில்
என்றும் வெற்றிடமே
ஆழ்ந்து உறங்கியது உங்கள் உடல்
மட்டும் தான் அப்பா
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் உயிர் எங்களுக்குள் வாடும்!

**"சந்நிதி இல்லம்"**
**கைதடி கிழக்கு, கைதடி.**

(CS24120 ) (3/6)

**என்றும் மறவாத**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

'சோதிநிகேதன்' காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த **மரியகொறெற்றி** ஆகிய நான் இன்று தொடக்கம் எனது பெயரை **மரியகொறெற்றி ஜெயராணி** என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**மரியகொறெற்றி ஜெயராணி**

## கார் விற்பனைக்கு

PEVGEOT 2019ஆம் ஆண்டு MODEL(3008) SILVER Colour கார் விற்பனைக்குண்டு.

**077 240 4912**

## வாத்தியங்கள் விற்பனைக்கு

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள வீணை, தம்புரா, ஹார்மோனியம், சுருதிப்பெட்டி விற்பனைக்குண்டு.

**075 0430 845**

**K.P.பாலகிருஸ்ணன்**
**பூனாரிமரத்தடி, K.K.S.வீதி**
**கொக்குவில்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 05 . 1933

மறைவு 21 . 03 . 2023

### திருமதி நாகேந்திரம் இராசபூபதி

சுன்னாகம் சந்தை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேந்திரம் இராசபூபதி நேற்று முன்தினம் (21.03.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரம்பிள்ளை-செல்லாச்சி தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- மீனாட்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மார்க்கண்டனின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான லோகநாதன் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), ஜெகதீஸ்வரன் மற்றும் சிறிசோமஸ்கந்தமூர்த்தி (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), சொர்ணாம்பிகைமலர் (ஆசிரியர் - வயாவிளான் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற யசிந்தாவின் அன்பு மாமியாரும், நிதர்சன் (பிரான்ஸ்), தர்ஷினி - மயூரதன் (ஆசிரியர்- மன்னார் முசலி தேசிய பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்திலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்தை வீதி,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 349 7378**
**077 693 7105**

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### எலும்புக் கழிவுகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2023

எலும்புக் கழிவுகளை விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர்கள் யாழ். மாநகரசபையில் விண்ணப்பப் படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் விபரத்தைக்** குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் **மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்று முகவரியிட்டு 06.04.2023 ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,150.00(வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல்- 23.03.2023.– 04.04.2023 (மு.ப 9.00 - பி.ப. 3.00 மணி வரை அலுவலக நாட்களில்)

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 06.04.2023 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 06.04.2023 மு.ப. 10.00 மணிக்கு

| இல | விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக் கூடிய பிணைவைப்பு | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 01 | எலும்புக் கழிவுகள் | ஒரு கிலோகிராம் ரூபா 7.00 | 5,000.00 | 1 வருடம் |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் . (தொலைபேசி இல 0212215978)

ஆணையாளர்,
யாழ். மாநகர சபை.

(CR 39510 )1-6



## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை



### வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 05.04.2023 ஆம் திகதி நடைபெற வுள்ளது.

பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கான **'கடை ஏலம் விடுதல்'** எதிர்வரும் 26.03.2023 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு:**

* ஏலத்தின்போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
* பொலித்தீன் தடைசெய்யப்பட்டுள்ளது.

**ஆலய பரிபாலன சபை**
**கரைச்சி புளியம்பொக்கணை**
**நாகதம்பிரான் ஆலயம்.**

(CR 39507 )1-6

## செல்லப்பா சுவாமிகள் குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் - நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 108ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வுகள் நல்லூரில் அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு திருமுறைப் பாராயணம், நற்சிந்தனைப் பாடல்கள் பாராயணம் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை, தீபாராதனை வழிபாடுகளும் நல்லூர்த் தேரடியில் வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. செல்லப்பா சுவாமிகளின் பரம்பரை வழிக் குடும்ப உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள குருபூசையில் அடியவர்களுக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-14-66)

## இரண்டாம் ஆண்டு நினைவேந்தல்

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்:

மத்தேயு - 5:5

### சிவபாக்கியன் நல்லம்மா



அம்மா எங்கள் ஆலமரம் சரிந்ததோ
ஆயிரம் விழுதுகள் இருந்துமென்ன
வேரென நீங்கள் இருந்தீர்கள் - அதில்
வீழ்ந்துவிடமாமல் நாம் இருந்தோம்

அம்மா மெழுகாய் நீங்கள் உருகி
எங்களுக்கு ஒளி கொடுத்தீர்கள்
எத்தனை இழப்புகள் இன்னல்கள் துன்பங்கள்
- அத்தனையும்
தாங்கி எங்களை காத்துநின்றீர்கள்

பிள்ளைகளை உயர்வாய் வாழவைக்க
நீங்கள் உரமாய்ப் போனீர்களோ!
எல்லோரையும் நேசிக்கும் உயர்ந்த பண்புடையவரே
உங்களைப் பிரிந்து எப்படி வாழ்வது அம்மா!

எங்கள் இதயம் கனக்க உங்களுக்கு
- விடைகொடுக்கின்றோம்
ஆண்டவரோடு ஆனந்தமாக இளைப்பாறுங்கள்
உங்களை ஒரு நாள் சந்திப்போம் என்று
ஆறுதல் அடைகின்றோம்.

**மண்ணில் 28.11.1936**

**விண்ணில் 23.03.2021**

**குடும்பத்தினர்**
***200, சென்பெனடிக் வீதி, யாழ்ப்பாணம்.***

## மரண அறிவித்தல்



### அருட்சகோதரி மேரி சலோமை சோசை தி.கு

வங்காலை, மன்னாரைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி சலோமை சோசை தி.கு (22.03.2023) புதன் கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு (23.03.2023) இன்று வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்**
**மாகாணத் தலைவி.**

**121, பிரதான வீதி**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் வயோதிபப் பெண்ணை தங்கியிருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. வயது(30-45)

**076 194 6699**
**077 473 9889**

## வீடு வாடகைக்கு

நல்லூருக்கு அருகாமையில் (3)மூன்று பேர் தங்கக்கூடிய சிறிய வீடு வாடகைக்குண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

**077 477 1218**

## பெயர் மாற்றம்

நீர்வேலி. அச்செழுவைச் சேர்ந்த **சுப்பையா ரஞ்சிதகலா** ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் **ரஞ்சினிகலா** என பெயர்மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் கையொப்பமிடவுள்ளேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**சு.ரஞ்சினிகலா**

(cr 39506) (2.6)





# INVITATION FOR BID 2023/03
# REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES (NP) JAFFNA

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from **World Bank** towards the cost of **Primary Health Care System Strengthening Project (PSSP)-2023** and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.

2. The **Chairman, Regional Procurement Committee**, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.

3. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

*"Bidding will be conducted through National Competitive Bidding (NCB. The Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

5. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents (Works specified in Table below as **Category 1**). Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below as **Category 2**)

6. Interested bidders may obtain further information from **address given below in 7** and inspect the bidding documents at the same place on any working days from 09:00 hrs to 15:00 hrs.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna, No.572/3, Hospital Road, Jaffna (T.P:021 222 1815, Fax:021 222 9991) from 9:00 hrs to 15:00 hrs. during the period from 2023.03.23 to 2023.04.06 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.

8. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, NP, Jaffna, No.572/3, Hospital Road, Jaffna on or before 10.30 a.m at 2023.04.10**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

9. Pre-Bid Conference will be held at **Conference Hall, Regional Directorate of Health Services, NP, Jaffna** commencing at **2.30 P.M on 2023.03.30**.

10. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| Category 1 | Document Issuing/Purchasing Period | | | From 2023-03-23 until 2023-04-06 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 2023-03-30 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2023.04.10 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| PSSP/NP/RDHS/JA/01/ 2023 | Electrical Works for Store for Modifying as RDHS Office at Health Village Pannai | 17.52 | 150 Days | C7 or C6 or C5 (Buildings) | 5,000.00 | 176,000.00 | Till 2023.07.23 |
| PSSP/NP/RDHS/JA/02/ 2023 | Completion of MO Quarters at Divisional Hospital Varany | 11.00 | 150 Days | C7 or C6 or C5 (Buildings) | 5,000.00 | 110,000.00 | Till 2023.07.23 |

| Category 2 | Document Issuing/Purchasing Period | | | From 2023-03-23 until 2023-04-06 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 2023-03-30 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2023.04.10 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| PSSP/NP/RDHS/JA/03/2023 | Completion of Repair of the Ward Block (02) at Base Hospital Kayts | 6.30 | 90 Days | C8 or C7 or C6 (Buildings) | 3,500.00 | 63,000.00 | Till 2023.07.23 |
| PSSP/NP/RDHS/JA/04/2023 | Completion of Repair of the Ward Block (04) at Base Hospital Kayts | 6.10 | 90 Days | C8 or C7 or C6 (Buildings) | 3,500.00 | 61,000.00 | Till 2023.07.23 |
| NP/04/41/2023/PSSP/W/30 | Construction of Wash Room at Base Hospital Kayts, Jaffna. | 6.09 | 111Days | C8, C7 and C6 (Buildings) | 3,500.00 | 61,000.00 | Till 2023.07.23 |
| NP/04/41/2023/PSSP/W/31 | Construction of Security Hut,Internal Path and Gate at Base Hospital Point Pedro | 4.08 | 97Days | C9, C8 and C7 (Buildings) | 3,500.00 | 41,000.00 | Till 10.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/32 | Improvement Works at PMCU Inuvil | 3.55 | 89Days | C9, C8 and C7 (Buildings) | 3,500.00 | 36,000.00 | Till 10.07.2023 |
| NP/04/41/2023/PSSP/W/33 | Construction of Vehicle park at Base Hospital, Chavakachcheri | 3.41 | 85Days | C9, C8 and C7 (Buildings) | 3,500.00 | 34,500.00 | Till 10.07.2023 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Services, NP**
**No.572/3, Hospital Road,**
**Jaffna.**

(CR 39508) 1-6


## 'கல்லாகவே ஆனாள்' கவிதைத் தொகுப்பு வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 23

சி.சிவசேகரத்தின் 'கல்லாகவே ஆனாள்' கவிதை தொகுப்பு நூல் வெளியீடு, கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ் இலக்கியப் பேரவையின் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பெண்கள் விடுதலை சிந்தனை அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின் நிகழ்வின் ஒரு பகுதியாக நூல் வெளியீடு இடம்பெற்றது. (ம-14,125)



## நடுத்தர முயற்சியாளருக்கு விசேட கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான நிலைபேறான சுற்றுலா சான்றுபடுத்தலுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக விசேட கருத்தமர்வு ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் ஒழுங்கமைப்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

கருத்தமர்வில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் உபாலி ரத்நாயக்க, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், வடமாகாண சுற்றுலா பணியக பணிப்பாளர் கிஷோத்குமார், வடமாகாண சுற்றுலாப் பணியக உத்தியோகத்தர்கள், வடமாகாண சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் கலந்துகொண்டனர். (எ-14,125)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

கைதடி - கண்டி வீதியிலுள்ள ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமானின் மஹா கும்பாபிஷேகத்தின் மணவாளக்கோல சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு பூசைகளுடன் ஆரம்பமாகவுள்ளது. அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு பாற்குடபவனி நடைபெற்று சங்காபிஷேக விசேட பூசைகள் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரிசளிப்பு

கொடிகாமம், மார்ச் 23

கிளிநொச்சி - பளை பேரூராலை சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அதிபர் ந.ராமதாஸ் தலைமையில் நாளை 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ய-159)

### 'இன்னொரு நிலம்' கலைக்கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 23

தவ.தஜேந்திரனின் 'இன்னொரு நிலம்' காண்பியக் கலைக்கண்காட்சி அங்குரார்ப்பணம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு தில்லை வாசா, துணவிச் சந்தி, சங்கரத்தையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

## மரண அறிவித்தல்



வைத்திய நிபுணர்

### திருமதி காசிநாதன் ஞானபுஸ்பம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா ஜேசிதீவை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய நிபுணர் காசிநாதன் ஞானபுஸ்பம் கடந்த (14.03.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஈஸ்வராம்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், வைத்திய நிபுணர் காசிநாதனின் பாசமிகு மனைவியும், Dr. வாசுகி (அவுஸ்ரேலியா) Dr. பிறைவின் (ஜேசிதீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, சிவபவன், வசந்தன் மற்றும் திருமதி த.ஞானபூபதி (சுன்னாகம்), திருமதி ம.ஞானரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு.சு.தம்பித்துரை (ஓய்வுநிலை அதிபர்), திருமதி கு.பரமேஸ்வரி (கனடா), திரு.செ.மனோகரன் (சொலிசிஸ்ரா - லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (29.03.2023) புதன்கிழமை ஜேசிதீவு லண்டனில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மைத்துனர் சு.தம்பித்துரை
(ஓய்வுநிலை அதிபர், முன்னாள் தவிசாளர், உடுவில் மத்தியஸ்தர் சபை)

T.P.: 021 224 0071
H.P.: 076 694 4531

(cs 24132) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 06 . 1961 — மறைவு 20 . 03 . 2023



### திருமதி விநாயகமூர்த்தி உமாதேவி

யாழ்ப்பாணம், கலட்டி அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும் சென்னை வளசரவாக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி உமாதேவி அவர்கள் கடந்த (20.03.2023) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற இராசேந்திரம் (வைரமுத்து) - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தம்பித்துரை - நாகரத்தினம் மற்றும் சரஸ்வதியின் அன்பு மருமகளும், பிரதீபா, பிரசன்னா (பிரான்ஸ்), பிரசாத் (கனடா), பிரவினா ஆகியோரின் அன்புத் தாயாரும், குமணன், கார்த்தி, அசோக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரித்தீஷ், பிரித்திகா, ஆகியோரின் அம்மம்மாவும், ஜரினா, ஜகிலா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், சத்தியாதேவி, கருணாதேவி, யசோதா, யசோதரன், இராசேஸ்வரன், ரேவதி, கிரிதரன், கிரிஷாந்தி, பிரபா ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரியும் ஸ்ரீஸ்காந்தராஜா, இரத்தினவேலு, ஜெகதீஸ்வரன், ஷாமினி, பாக்கியநாதன், கிருபா, சந்திரகுமார், படிகலிங்கம் ஆகியோரின் பாசமிகு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2023) பிற்பகல் 1.00 மணிக்கு சென்னை போரூர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கண்ணீருடன்
குடும்பத்தினர்,
(பெறாமகன்)
00919500055555

(CS 24150) 1-6

### யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
### உரும்பிராய்
### தரம் 6 - 12 அனுமதி - 2023

யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் தரம் 6 தொடக்கம் தரம் 12 வரை மற்றும் க.பொ.த. (உ/த) தொழில் கல்வி வகுப்புகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பத்திற்கான இறுதித்திகதி : 2023.03.31

அதிபர்.
021 223 0729

(CR 395121) 6

## மரண அறிவித்தல்



### விநாயகமூர்த்தி ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)

அராலி தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி ஆறுமுகம் நேற்று (22.03.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், தவயோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் (பவுனர்), கனகரத்தினம் (கனகு) மற்றும் சண்முகராஜா (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கௌரிகாந்தியின் (கௌரி-ஹொலண்ட்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

களவத்துறை வீதி,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

## தவறான முடிவெடுத்து மாணவி உயிர்மாய்ப்பு

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் தவறான முடிவெடுத்து மாணவி ஒருவர் கடந்த திங்கட்கிழமை உயிரை மாய்த்துள்ளார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாணவி அண்மையில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றியிருந்தார்.

வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்ற நிலையில் மாணவி தனித்திருந்துள்ளார். வெளியே சென்ற உறவினர்கள் வீட்டுக்குத் திரும்பியவேளை மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார் . அதனையடுத்து சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் ஒப்படைத்தனர். உயிரிழப்பு தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ஒ-14-125)

## சுடுநீர் கொட்டி பெண் காயம்

பொங்கல் பானையிலிருந்து எடுக்கப்பட்ட சுடுநீர் அருகிலிருந்த பெண்ணின் முதுகில் தவறுதலாக ஊற்றப்பட்டதில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஆலயத்தில் பல பாகங்களிலிருந்து வருகை தந்த பக்தர்கள் பொங்கல் வைத்து நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். இதன்போது அடியவர் ஒருவர் பொங்கல் பானையிலிருந்த மேலதிகமான சுடுநீரை கிண்ணத்தில் எடுத்து அதனை வெளியே ஊற்றுவதற்காகக் கொண்டு சென்ற வேளை கால் தடுக்கி வீழ்ந்தார். அந்தச்சமயத்தில் அங்கு அமர்ந்திருந்த 24 வயதான பெண்ணின் முதுகில் சுடுநீர் கொட்டியது. சுடுநீர் பட்டதால் காயமடைந்த பெண் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

(ஒ-14-9)

## பிரதேசசபையின் நடமாடும் சேவை

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை உப அலுவலக பிரிவுக்குட்பட்ட 4ஆம் வட்டார பொதுமக்களுக்கான நடமாடும் சேவைகள் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 30ஆம் திகதி வியாழக்கிழமை இரு நாள்களாக இடம்பெறவுள்ளது.அதன்படி ஜே/250 பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு 29ஆம் திகதி புதன்கிழமை நதையிட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்திலும் ஜே/251 பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு 30ஆம் திகதி வியாழக்கிழமை பலிலிட்டித்துறை ஜே/251 கிராம அலுவலர் அலுவலகத்திலும் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

நடமாடும் சேவையில் சோலைவரி அறவீடு, ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான நடவடிக்கைகள், வியாபார நிலையங்களுக்கான வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளல், வளர்ப்பு நாய்களுக்கான உரிமம் பெற்றுக்கொள்ளல், துவிச்சக்கர வண்டி உரிமம் பெற்றுக்கொள்ளல் ஆகியன இடம்பெறவுள்ளன. குறிப்பிடப்பட்ட பிரிவு பொதுமக்கள் நடமாடும் சேவையில் கலந்துகொள்ளுமாறு வலி.வடக்கு பிரதேசசபை செயலாளர் சு.சுதர்ஜன் அழைப்பு விடுத்துள்ளார்.

(ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரச் சீர்த்திருத்தங்களில் இலங்கைக்கு அர்ப்பணிப்பு தேவை

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 23

இலங்கை அரசாங்கம் நிதி முகாமைத்துவம் மற்றும் புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமென்று சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுடன் நிதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடந்த விசேட சந்திப்பொன்றிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு நிதிக் கட்டுப்பாடு, ஊழல் ஒழிப்பு மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பில் அரச அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் மிகவும் முக்கியமானது என ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பின்னணியை இலங்கை அரசாங்கம் சரியான முறையில் மதிப்பீடு செய்துள்ளமைக்கு பாராட்டுகளைத் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், நிதி முகாமைத்துவம் மற்றும் புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த காலங்களில் என்ன தவறுகள் நடந்தன என்பதில் கவனம் செலுத்துவதை விடவும், புதிய சீர்திருத்தத் திட்டங்களில் கவனம் செலுத்துவது முக்கியம் என்று குறிப்பிட்டுள்ள அவர்கள், பல்வேறு துறைகளில் காணப்படும் சவால்களுக்கும், சீர்திருத்தங்களில் முன்னுரிமைக்கும் சர்வதேச நாணய நிதியம் வழங்கக்கூடிய ஆதரவு தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பது முக்கியம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு நாடாக முன்னோக்கிச் செல்வதற்கு இந்தப் புதிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அவசியமானது எனக் குறிப்பிட்டுள்ள நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன, நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி மறுசீரமைப்பு துறைகள் முக்கியமானது என்றும் அதற்கமைய நிதி முகாமைத்துவத் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வாய்ப்பு ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்தப் பணியில் நேரடியாகப் பங்களிக்கும் அரசு நிறுவனங்களின் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். சம்பந்தப்பட்ட வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை தொடர்ந்து ஆராய்ந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்காலத்தில் இவ்வாறான கூட்டங்களைக் கூட்டுவதன் முக்கியத்துவத்தையும், இந்தச் செயற்பாடுகளை வெற்றியடையச் செய்வதில் ஈடுபட்டுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களின் அர்ப்பணிப்பின் அவசியத்தையும் சாகல ரத்நாயக்க விளக்கியுள்ளார். (அ-எ-இ)

### மின்சாரத்தில்...

இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் நடந்துள்ளது.

காரைநகர், நிலக்காட்டைச் சேர்ந்த குமாரசாமி சுதாகரன் (வயது-26) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவர் வீடொன்றில் கட்டட வேலையில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். வீட்டின் மேற்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்தபோது தறப்பாளைக் கம்பியால் உயர்த்தும்போது, கையில் இருந்த இரும்புக் கம்பி, உயர் மின்னழுத்த கம்பியில் தொடுகையுற்று மின்சாரம் தாக்கியுள்ளது என்று கூறப்படுகின்றது. மின் தாக்கத்தால் தூக்கி வீசப்பட்ட இளைஞர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என அங்கு மருத்துவர்கள் உறுதிசெய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-26)

### கரையிலிருந்த...

மணியளவில் நடந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் படகுகள் முன்னர் கடலட்டைத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டவை என்றும், தற்போது நீண்டகாலமாக பாவனைக்குட்படுத்தாது கரையில் நிறுத்தப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

படகுகளுக்கு தீ வைத்தவர்கள் யார் என்பது கண்டறியப்படாத நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26,23)

### 11 வயது...

சென்றபோது தவறி கிணற்றில் வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

சிறுவனின் உடல் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருவதற்கு முன்னரே சிறுவனின் உடல் கிணற்றில் இருந்து வெளியே எடுக்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (அ-எ-26,125)

### புதிய...

பல மாதங்களாக இழுபறியில் இருந்து வரும் 10 புதிய அமைச்சர்களின் நியமனமும் இதில் அடங்கும் எனத் தெரிய வருகின்றது.

அமைச்சரவையில் தமது தரப்பைச் சேர்ந்த மேலும் 10 பேரைச் சேர்க்க வேண்டும் என்பது மொட்டுக் கட்சியின் கோரிக்கையாகும். புதிய அமைச்சரவை மாற்றம் என்பது பல மாதங்களாகப் பேசப்பட்டு வருகின்றது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையில் புதிய அமைச்சரவையை நியமித்தால் மக்கள் அதிருப்தியடைவார்கள் என்பதால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதை இழுத்தடித்தே வந்திருந்தார். பொருத்தமான தருணம் வரும்போதே அந்த நியமனத்தைச் செய்வதென்பது ஜனாதிபதியின் திட்டம் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஆனால், மொட்டுத் தரப்பு அமைச்சரவையில் தமது அணியைச் சேர்ந்த மேலும் 10 பேரை நியமிக்கவேண்டும் என்று தொடர்ச்சியாக ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வந்தது. இதோ நியமிக்கின்றேன், அதோ நியமிக்கின்றேன் என்று கூறி இழுத்தடித்த ஜனாதிபதி, இறுதியாக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் முடிவடைந்ததும் புதிய அமைச்சரவையை நியமிக்கின்றேன் என்று கூறி மொட்டுக் கட்சியினரை ஜனாதிபதி ஆறுதல்படுத்தினார்.

இறுதியில் அதுவும் நடக்காதநிலையில், மொட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மீது கடும் அதிருப்தியில் இருந்தனர். ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்த பின் புதிய அமைச்சரவை நியமிப்பதுதான் பொருத்தமானது என்ற நிலைப்பாட்டில் இருந்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியக் கடன் தொகையின் முதல் தவணைக் கொடுப்பனவு தற்போது கிடைத்துள்ள நிலையில், புதிய அமைச்சரவையை நியமனத்துக்கு உத்தேசித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (அ-எ-22)

### கடந்தகாலத்தை...

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் முதல் தவணை நிதியான 330 மில்லியன் டொலர் தற்போது கிடைத்துள்ளது. கடந்த காலத்தை விமர்சிப்பது எனது பணியல்ல - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றினார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தக் கடன் வசதியின் கீழ், 4 ஆண்டுகளில் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் உதவியைப் பெறுவோம். அதன்முதல் தவணையின் கீழ் 330 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கிறது. உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் 7 பில்லியன் டொலர் துரித கடன் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்கவேண்டும். கடந்தகாலத்தை விமர்சிப்பது எனது பணியல்ல. நாட்டை கட்டியெழுப்புவதே எனது பணி. கடந்த கால தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் சட்டதிட்டங்கள் மற்றும் பின்னணியை வகுத்து, எதிர்காலத்தை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வது நாட்டை மீண்டும் உயர்த்துவதற்கான சந்தர்ப்பம். இதனூடாக நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப புதிய பாதை திறக்கப்பட்டுள்ளது. பணவீக்கம் காரணமாக முழு சமூகமும் எதிர்கொண்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் எமக்குச் சரியான புரிதல் இருக்கின்றது. இந்தச் சிரமங்கள் தற்காலிகமானவை. தற்போதைய முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கான பலன்களை மக்கள் விரைவில் பெறுவார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் என்பது வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்க வழங்கப்படும் வசதியாகும். இந்த வசதி மூலம் மீண்டும் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. இலங்கை இனி வங்குரோத்தடைந்த நாடாக இருக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது. எமது உள்நாட்டு வங்கிகளுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் கடன் பத்திரங்களை மதிக்கின்றன. ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து மிகக் குறைந்த வட்டியில் கடன் உதவி பெறுவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீண்டும் இலங்கை மீது நம்பிக்கை வைப்பர். பரந்த அளவிலான சர்வதேச வாய்ப்புகளுக்கான கதவுகள் எங்களுக்காகத் திறக்கப்படும். வலுவான புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் தயாராகி வருகிறது. இந்த உடன்படிக்கையின் மூலம் நமது நாட்டின் நிதி ஒழுங்கு சட்டமாக்கப்படும். ஊழலைத் தடுக்க புதிய கடுமையான சட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் இலங்கையில் இதுவரை இல்லாத புதிய நிதிக் கலாசாரம் மற்றும் ஊழல் அற்ற சூழல் உருவாக்கப்படும் - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மறுசீரமைப்புக்கள்...

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப் பட்ட கடன் வசதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் நேற்றுக்காலை நாடாளு மன்றத்தில் விசேட உரையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்த் தினார். அதிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- நாம் தற்போது நடைமுறைப்படுத்தி வரு கின்றதும், எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்த எதிர்பார்த்துள்ள மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பாகவும் இந்தச் சபைக்குத் தெரியப்படுத்த விரும்புகின் றேன்.

2025 ஆம் ஆண்டுக்குள் முதன்மை பற்றாக்குறையை மொத்தத் தேசிய உற் பத்தியில் 2.3 வீதமாக மாற்றுவதே எமது இலக்கு. இலங்கை அரசாங்கத் தின் வருமானம் தற்போது மொத்தத் தேசிய உற்பத்தியில் 8.3 வீதமாகும். உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடு கையில், நமது அரசின் வருமானம் மிகக் குறைந்த அளவில் உள்ளது. இத னால்தான் 2026 ஆம் ஆண்டுக்குள் அரச வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 15 வீதமாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

துறைவாரி வரிச் சலுகைகள் இல்லாமல் கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி விகி தம் இப்போது 30 வீதமாக உயர்த்தப்பட் டுள்ளது. வற் வரியை 8 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்த நாம் நடவடிக்கை எடுத்தோம். வற் வரிக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்குகளை படிப் படியாக குறைக்கவும், வற் வரி திரும்பச் செலுத்துவதை துரிதப்படுத்தவும், எஸ் வட் முறையை இரத்துச் செய்யவும் நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2025ஆம் ஆண்டில், குறைந்தபட்ச வரி விலக்குடன், சொத்து வரி முறைக் குப் பதிலாக செல்வ வரியொன்றை விதிக்கவும், பரிசு மற்றும் பரம்பரைச் சொத்து வரியொன்றை அறிமுகப்படுத் தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

முறையான செலவு முகாமைத்துவம் மூலம் அரச செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பணவீக்கத்துக்கு ஏற்ப, ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை சமநிலை செய்யவும் எதிர்பார்க்கப்படு கின்றது. ஆனால், முதன்மை வரவு - செலவுத் திட்டக் கையிருப்பு வரம்புக்குள் இந்த மாற்றங்கள் செய்யப்படும்.

எரிபொருளின் விலை நிர்ணயம் செய் வது, அரசியல் அதிகார மட்டத்திலிருந்து முற்றாக நீக்கப்படும். 2018ஆம் ஆண்டு விலை சூத்திரத்தின்படியே எரி பொருள் விலை தீர்மானிக்கப்படுகிறது. எதிர்கால செலவு மதிப்பீட்டை கணக்கில் கொண்டு, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மின்சார கட்டணத்தை மறுசீர மைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெரும் நட்டத்தைச் சந்தித்து வரும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, ஸ்ரீலங்கா விமான சேவை, இலங்கை பெற்றோலி யக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களின் இருப்பு நிலைகள் மறுசீரமைக்கப்படும். காலா வதியான இறையாண்மை பிணைக ளின் பேரில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகையை இலங்கை அரசாங் கம் செலுத்த வேண்டிய கடன் தொகை யாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக் கப்படும்.

பணவீக்க விகிதத்தை மீண்டும் 4 வீதம் மற்றும் 6 வீதத்துக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை பணவீக்கத்தை கணிசமான அளவில் குறைக்க முடிந்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்க மதிப்புக்குக் குறைப்பது எங்கள் இலக்கு.

இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தும் போது, பணம் அச்சிடுவது படிப்படியாக குறைந்துவிடும். அதனால் வரவு - செல வுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுசெய்ய, கடன் பெற்றுக்கொள்ளாமல் வருமா னத்தை ஈட்டிக்கொள்ள திறைசேரிக்கு நேரிடும். தற்போதுள்ள அந்நியச் செலா வணி, கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறை கள் படிப்படியாக நீக்கப்பட்டு, அந்நியச் செலாவணி சந்தையின் செயற்பாடு கள், சந்தை அளவுகோல்களின் அடிப் படையில் தீர்மானிக்க அனுமதிக்கப் படும். தீர்மானிக்கப்பட்ட இலக்குகளின் படி, மத்திய வங்கி வெளிநாட்டு கையிருப் புக்களை அதிகரிக்க வெளிநாட்டு நாண யம் கொள்வனவு செய்யப்படும்.

உள்ளூர் நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்கி, அரசாங்கத்தின் பலவீனங் கள் தொடர்பாக சர்வதேச நாணய நிதி யம் அறிக்கை ஒன்றைத் தயாரிக்கிறது. ஊழலைத் தடுப்பது தொடர்பாக அரசு மற்றும் நிறுவன கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய இதனால் வாய்ப்பு ஏற்படும். ஐ.நா. சாசனத்தின் பிரகாரம் ஊழல் எதிர்ப்புச் சட்டம் தயாரிக் கப்படும். இழந்த சொத்துக்களை மீட்ப தற்கான ஏற்பாடுகளை 2024 ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சட்டக் கட்டமைப் பில் சேர்க்க எதிர்பார்க்கிறோம். வலு வான நிதிக் கொள்கைகளின் அடிப்படை யில் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் உருவாக்கப்படும்.

சலுகை வரி அடிப்படையில் வாகனங் களை இறக்குமதி செய்ய அனுமதி பெற்ற நபர்கள், வரிச்சலுகை, வரித் தீர் வைப் பெறும் நிறுவனங்களின் பட்டியல் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பகிரங்கப்படுத்தப்படும். பெரு மளவிலான பொது கொள்முதல் ஒப்பந் தங்களின் விவரங்களும் பகிரங்கப்படுத் தப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத் துக்கு அப்பால் பல்வேறு பொருளாதாரச் சீர்திருத்தங்களை எதிர்காலத்தில் அறி முகப்படுத்த எதிர்பார்க்கிறோம். பொரு ளாதாரத்தைத் திறப்பதன் மூலமும், டிஜிற்றல் மயமாக்குவதன் மூலமும் நிலையான மறுமலர்ச்சியை அடைவ தும், நடுத்தர மற்றும் நீண்டகால உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதும் இதன் நோக்கமாகும்.

நாங்கள் கடினமான காலத்தைக் கடந்து வருகிறோம். வரிச்சுமையால் சமூகத் தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கடுமை யான அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ள னர் என்பதை நாம் அறிகின்றோம். பணவீக்கத்தால் ஒட்டுமொத்த சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளதையும் நாம் அறி வோம். ஆனால், இந்த நேரத்தில் நாம் தற்போது செயற்படுத்தி வரும் கொள் கைகளில் இருந்து விலகிச் செல்ல முடி யாது. நாம் எதிர்கொள்ளும் கசப்பான உண்மை இதுவாகும்.

மற்றுமொரு முக்கியமான விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சர்வதேச நாணய நிதி யத்தின் உடன்படிக்கையில் மாத்திரம் நாங்கள் திருப்தியடைய முடியாது. இது பயணத்தின் முடிவு அல்ல. இது மற் றொரு நீண்ட பயணத்தின் ஆரம்பம் ஆகும். இப்போது நாம் நமது முயற்சி யுடன் அந்த வழியில் செல்ல வேண்டும். நாங்கள் நமது கடன் வழங்குநர்களு டன் பேச்சுவார்த்தை நடத்தி கடனை மறுசீரமைக்கவேண்டும். அத்துடன் நாட்டின் வருமானத்தையும் அதிகரிக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கவேண்டும். வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் வழிகளை உருவாக்கவேண்டும் - என் றார். (அ-எ-இ)

## விவாதம்...

ஏற்றுக்கொள்ளமுடியாது என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்துள்ளார்.

சர்வதேச நாயண நிதியத்தின் நீடிக்கப் பட்ட கடன் வசதியைப் பெற்றுக்கொள் வது தொடர்பில் நேற்றுக்காலை நாடா ளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க விசேட உரை ஒன்றை ஆற்றி னார். அதில் நாட்டின் பொருளாதாரத் தைக் கட்டியெழுப்ப, சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நிறை வேற்ற ஆதரவளிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியிடம் கோரிக்கை முன்வைத் தார். அதற்குப் பதிலளித்து உரையாற் றும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அதேவேளை, இந்த உடன்படிக்கையை நாடாளுமன்றம் அங்கீகரிக்குமா என் பது தொடர்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் வாரத்துக்குள் தனக்குத் தெரி விக்கவேண்டும் என்று குறிப்பிட்ட ஜனா திபதி, அதன்மூலமே சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டாவது சுற்றுப் பேச் சுக்களில் ஈடுபட முடியும் என்று தெரிவித் தார். (அ-எ-இ)

## எழிலன்...

கள், எதிர்வரும் மே மாதம் ஒத்திவைக் கப்பட்டுள்ளது. நேற்று இந்த வழக்கு திகதியிடப்பட்டிருந்த நிலையில், நீதிபதி மன்றுக்குச் சமுகமளிக்காத காரணத் தால் மே மாதத்துக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாள ராக செயற்பட்ட எழிலன் உட்பட இறுதிக் கட்டபோரில் இராணுவத்தினரிடம் சரண டைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்க ளின் குடும்ப அங்கத்தவர்கள் சார்பில் இந்த ஆட்கொணர்வு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனுமீதான தீர்ப்பை வவுனியா மேல்நீதிமன்றம் கடந்தமாதம் வழங்கியது. எழிலன் மற் றும் ஏனையோரை நீதிமன்றில் நேற்று முற்படுத்தவேண்டும் என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இராணு வத்திடம் சரணடைந்தனர் என்பதற்குரிய ஆதாரங்கள் இருப்பதில் மன்று திருப்தி யடைந்தது. எனவே அத்தகைய நபர் களை நீதிமன்றில் முற்படுத்துவதுடன், அவ்வாறு முடியாது போனால் அதற் கான காரணங்களை நீதிமன்றுக்கு விளக்கவேண்டும் என்றும் மன்று குறிப் பிட்டிருந்தது.

நேற்று நீதிபதி மன்றுக்கு சமுகமளிக்கா மையால் வழக்கு எதிர்வரும் மே மாதத் துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் முன்னி லையான சட்டத்தரணி கே.எஸ். ரட்ண வேல் தெரிவித்தார். இன்று (நேற்று) இராணுவம் சார்பாக சட்டத்தரணி ஒரு [illegible] மன்றில் சமுகமாகியிருந்தார் [illegible] எவரையும் நீதிமன்றத்துக் குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு கள் காணப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-110)

## ஹெரோய்ன்...

டில் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர், மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த சந்தேக நபர் பிடியாணையின் அடிப்படையில் நவாலி பகுதியில் வைத்து மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந் தார். சந்தேகநபர் மருத்துவப் பரிசோத னைக்குட்படுத்தப்பட்டபோது அவர் ஹெரோய்ன் போதைப்பொருள் பாவித் துள்ளமை உறுதி செய்யப்பட்டிருந்தது. நீதிமன்றில் சந்தேகநபர் முற்படுத்தப் பட்டபோது, அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், வழக்கு எதிர் வரும் மே மாதம் 22ஆம் திகதிக்கு தவ ணையிடப்பட்டது.

அதேவேளை, சந்தேகநபர் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில், அங்கிருந்து தப்பிக்கவும் அவர் முயற் சித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (அ-எ-27)

## ஒன்பது...

11 பேரில் 9 பேர் நேற்றுமுன்தினம் விடு விக்கப்பட்டனர்.

வெடிபொருள்களுடன் தொடர்புடைய பயங்கரவாதச் செயற்பாடுகளை முன் னெடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப் படையில் 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பல் வேறு சந்தர்ப்பங்களில் அவர்கள் 11 பேரும் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் தொடர்பான வழக்குகளின் விசாரணை கள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம் பெற்று வந்தன. இவர்களில் விஜய குமார் கேதீஸ்வரன், அரியரத்தினம் காந்தராசா, அன்பரசன் ஹரிஹரராஜ், இளங்கரத்தினம், கிருஷ்ணசாமி முத்து ராசா, ரூபகாந்தன், ரகுவரன், உதய சீலன், புஷ்பதேவன் ஆகியோரே நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர். ஏனைய இருவரும் இன்னமும் விடுவிக்கப்பட வில்லை. எனினும் அவர்களையும் விடு விக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (அ-ம)

## நகைத்...

வரப்பட்ட சந்தேகநபர் ஒருவர் தப்பி யோடியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பா ணம், முலவையைச் சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரி டம் நகைகளும் மீட்கப்பட்டிருந்த நிலை யில், நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் ஹெரோய்ன் போதைப் பொருள் தொடர்பான மருத்துவப் பரி சோதனைக்காக அழைத்து வரப்பட்ட போதே தப்பியோடியுள்ளார். சிறுநீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், திடீரென சிறைக் காவலர் களை தள்ளிவிட்டு சந்தேகநபர் தப்பி யோடியுள்ளார். சந்தேகநபரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, மருத்துவப் பரிசோதனை யில் சந்தேகநபர் ஹெரோய்ன் பாவித் துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலக நீர் தின விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் உலக நீர் தினத்தை முன்னிட்டு விழிப் புணர்வு நிகழ்வொன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

உலக நீர் தினம் தொடர்பாகவும் அதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் சென். பீற்றர்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் மற்றும் விருந்தினர்களால் விசேட உரை நி[illegible]த்தப்பட்டது.

[illegible]னைத் தொடர்ந்து நீரின் முக்கியத் [illegible]ந்தை வெளிப்படுத்தும் வகையில் "[illegible]ன்றி வாழ்வு ஏது? நீரின் பாதுகாப் [illegible] வழி ஏது?", "ஒவ்வொரு துளி நீரும் [illegible]வொரு உயிரின் ஊற்றுக்களே", [illegible]ச்சூழலை பாதுகாப்போம் சுகாதார [illegible]வைப் பலமாக்குவோம்" உள்ளிட்ட [illegible]வறு வாசகங்கள் எழுதப்பட்ட பதா[illegible]ளை தாங்கியவாறு மாணவர்கள் [illegible]புணர்வில் ஈடுபட்டனர்.

[illegible]டன் நவாலி சென். பீற்றர்ஸ் தேவா[illegible]தினர் மற்றும் நவாலி சென். பீற்றர்ஸ் றோமன் கத்தோ[illegible] தமிழ்க் கலவன் பாடசாலையினர் பயன்படுத்தும் நன்னீர்க்[illegible]ு மீள் புனரமைக்கப்பட்டு அன்றாட நடவடிக்கைகளுக்காக [illegible]ாலயம் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்[illegible]ு.

(ஒ-14-125)

## மணமகள் தேவை

01. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம். (V). 1971. அனுசம். Bachelor of Electrical Engineering, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 7428
02. சாவகச்சேரி - மானிப்பாய். இந்து கௌரவகுலம். (V). 1979. சதயம். Bachelors Degree in English, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 12030
03. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம். (V). 1982. அத்தம். Masters in Electrical Engineering, USA Citizen Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 24750
04. வேலணை மேற்கு. இந்து கௌரவகுலம். (V). 1980. புனர்பூசம். MSc Engineering, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 8257
05. சுண்டிக்குழி - சித்தன்கேணி. இந்து கௌரவகுலம். 1971. ரேவதி. Dip. in Criminology, Canada Citizen Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31064
06. உடுவில். இந்து கௌரவகுலம் (V). 1964. உத்தரம். MBBS Doctor, Canada Citizen Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29349
07. கோண்டாவில். இந்து கௌரவகுலம் (V). 1979. அவிட்டம். MSc Canada Citizen Divorce மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 போன் - 077 539 3728

## விற்பனைக்கு

ஒரு வருடங்களே ஆன நல்ல நிலையில் உள்ள 200x 15 அடி தகர கொட்டில் விற்பனைக்கு உண்டு.
1) சுத்தவர அடைக்கப்பட்டது. 2) பண்ணைகள், கல்வி நிலையம் அமைக்க உகந்தது. 3) கல்வி நிலைய தளபாடங்களும் உண்டு.

(CS 24127)(3/6) தொடர்பு : 077 828 0900

## Personal Class

Maths & English Gr. 04 to Gr. 11 Jaffna.
Cont.No. 077 639 3869

## மணமகன் தேவை

01. அனலைதீவு - வேலணை. இந்து கௌரவகுலம் (V). 1990. மகம். Bachelor of Optometry, Australia Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32633
02. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V). 1991. உத்தரம். Graduate (Family Law) Lawyer Australia Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32297
03. உரும்பிராய் - மாவிட்டபுரம். இந்து கௌரவகுலம் (V). 1991. புனர்பூசம்.. MBBS Doctor, Australia வில் வேலை செய்துகொண்டிருக்கும் USA Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32050
04. புங்குடுதீவு. இந்து கௌரவகுலம் (V). 1992. உத்திரட்டாதி. ACCA Complited Accountant Canada மணமகளுக்கு மணமகன் தேவை.
05. தெல்லிப்பளை- கோண்டாவில். இந்து கௌரவகுலம் (V). 1993. அச்சுவினி. BSc Nursing Jaffna University, Canada Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
06. பருத்தித்துறை - சாவகச்சேரி. இந்து கௌரவகுலம் (V). 1986. திருவாதிரை. MSc in IT and Charted Financial Analyst, Canada Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32904
07. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V). 1995. அத்தம். BSc Post Graduate Dip, Canada Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
08. அல்வாய். இந்து கௌரவகுலம் (V). 1987. பரணி. BSc (Hons), Chemical Engineering Technolagy, Canada Citizen மண மகளுக்கு மணமகன் தேவை.
09. கந்தர்மடம். இந்து கௌரவகுலம் (V). 1990. அச்சுவினி. BBA, Accountant, Canada Citizen மண மகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 31884
10. உடுப்பிட்டி. இந்து கௌரவகுலம் (V). 1995. அவிட்டம்.Masters of Bio Medical (UK), UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
11. காரைநகர் - பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (V). 1995. பூரம். BSc in Accounting and Finance, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
12. உடுவில் - இளவாலை. இந்து கௌரவகுலம் (V). 1990. மிருகசீரிடம். MBBS DOCTOR, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32235

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 போன் - 077 539 3728

## DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28



குறிப்பு: வேலையாட்கள் தேவை.



[illegible]த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org